# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**<u>சுற்றறிக்கை எண்</u>:3** **<u>தேதி</u>:17.10.2014**

# 7வது தமிழ் மாநில மாநாடு, திருச்சி

அன்பார்ந்த தோழர்களே,

நமது BSNL ஊழியர் சங்கத்தின் 7வது தமிழ் மாநில மாநாடு பொன்மலை தியாகிகள் பூமியாம் திருச்சியில் மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள நியூ டைமண்ட் மஹாலில் 11.10.2014 அன்று எழுச்சியுடன் துவங்கியது.

ஊழலுக்கு எதிராக உரத்து குரல் கொடுத்ததால் காசியபாத் பொது மேலாளரால் கொலை செய்யப்பட்ட மாவட்ட செயலர் தோழர் சுகேந்திரபால் சிங் அவர்களின் பெயரால் அமைந்த நுழைவு வாயில் வழியாக தொழிலாளர் வர்க்கத்தின் ஒப்பற்ற தலைவர் தோழர் R.உமாநாத் நினைவரங்கில் துவங்கிய இம்மாநாட்டிற்கு மாநிலத் தலைவர் தோழர் **K.மாரிமுத்து** தலைமை தாங்கினார்.

### பொது அரங்கம்:-

முதல் நிகழ்ச்சியாக தேசிய கொடியை தோழர் M.நாராயணசாமி ஏற்றி வைக்க சங்கக் கொடியை தோழர் C.பழனிச்சாமி விண்ணதிரும் கோஷங்களுக்கிடையே ஏற்றி வைத்தார். அஞ்சலி பாடலை புதுக்கோட்டை தோழியர் பூம்பாவை பாடினார். அஞ்சலியுரையை தோழர் S.சுப்ரமணியன் ஆற்றினார்.

வரவேற்புக்குழு சார்பாக தோழர் அஸ்லம் பாஷா வரவேற்புரை ஆற்றினார். தமிழ் மாநிலச் சங்கம் சார்பாக தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் வரவேற்புரை ஆற்றினார். வரவேற்புக்குழு தலைவர் தோழர் G.பாலச்சந்திரன் மற்றும் மாநிலத் தலைவர் தோழர் K.மாரிமுத்து ஆகியோர் தலைமையுரை ஆற்றினார்கள்.

அகில இந்திய பொதுச் செயலர் தோழர் **P.அபிமன்யு** துவக்கவுரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் ஜனநாயக முறையில் சிறப்பாக செயல்பட்டுவரும் நமது தமிழ் மாநிலச் சங்கத்தை வாழ்த்தினார். சமீபத்தில் வேலூர் மாவட்டத்தில் வேலை நீக்கம் செய்யப்பட்ட 140 ஒப்பந்த தொழிலாளர்கள் பணிக்கு எடுக்கக்கோரி நடைபெற்ற வீரம் செறிந்த போராட்டத்தை மனதார பாராட்டினார். தேர்தல் பிரச்சாரத்தின் போது பழைய காங்கிரஸ் அரசின் கொள்கைகளால் பறிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு ஆதரவாக பேசி வாக்குகளை பெற்று ஆட்சியைப் பிடித்த திரு நரேந்திர மோடி, ஆட்சிக்கு வந்தபின் அந்த ஏழை மக்களுக்கு “கசப்பு மருந்துகளையே” கொடுத்து வருவதை தெளிவாக எடுத்துரைத்தார். புதிய அரசாங்கமும் கடைபிடித்துவரும் தாராளமய கொள்கைகளை கடுமையாக சாடிய பொதுச் செயலர் BSNL நலனுக்கு எதிராக ஆட்சியாளர்களும், மேல்மட்ட நிர்வாகமும் ஏற்படுத்திவருவதையும்

எடுத்துரைத்தார். தீர்க்கப்படாத 30 அம்ச கோரிக்கைகளின் மீது நிர்வாகத்தின் நிலைபாட்டை விளக்கிய அவர் ,அதற்கு எதிராக நமது JAC விடுத்துள்ள 27.11.2014 வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்குமாறு கேட்டுக்கொண்டார்.

தமிழக தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாநிலத் தலைவர் தோழர் **P.சம்பத்** அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். அரசின் கொள்கைகள் தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிராக இருக்கக்கூடிய இந்த காலகட்டத்தில் நமது வர்க்க ஒற்றுமையை வலியுறுத்தினார். வேற்றுமையில் ஒற்றுமை என்பது இந்தியாவின் தாரகமந்திரமாக உள்ள சூழலில் இன்றைக்கு பிரிவினைவாத சக்திகள் உழைக்கும் மக்களை சாதி மத இனம் மொழி அடிப்படையில் பிளவுபடுத்த கடும் முயற்சியினை மேற்கொண்டு வருகின்றனர். உழைக்கும் மக்கள் இதற்கு எதிராக ஒன்றுபட்டு போராட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

தீண்டாமையின் கோரவடிவங்களில் ஒன்றாக சமீபத்தில் பீகார் முதல்வர் ஒரு கோவிலில் வழிபாடு நடத்திவிட்டு வந்தபின்னர், அந்த கோவிலை தண்ணீர் ஊற்றி சுத்தம் செய்த கொடுமை நிகழ்ந்ததை அவர் சுட்டிக்காட்டினார். தலித் மக்களின் எழுச்சியை ஒடுக்குவதற்கு நடைபெற்றுவரும் ஒடுக்குமுறையை விவரித்த அவர், அதற்கு எதிராகவும் நாம் அனைவரும் ஒன்றுபட்டு போராடவேண்டும் எனவும் தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கமும் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுவதை பாராட்டினார். அவர் உரையாற்றியபின் தமிழக தீண்டாமை ஒழிப்பு முன்னணிக்கு நன்கொடை வழங்க மாநிலச் செயலர் அறைகூவல் விடுத்தவுடன் அரங்கில் இருந்த தோழர்கள் முதல் தவணையாக ரூ 12000/- வழங்கினர்.

## சேவை கருத்தரங்கம்:-

மாநாட்டில் நடைபெற்ற சேவை கருத்தரங்கத்தை துவக்கிவைத்து பேசிய மாநிலச் செயலர் தோழர் **S.செல்லப்பா** தமிழ்நாடு BSNL வருமானம் 2012-13 ஆண்டில் 1920 கோடி ரூபாய். இது 2013-14-ல் 7.64% அதிகரித்துள்ளது என்பதை சுட்டிக்காட்டினார். செலவினங்கள் 2% அதிகரித்திருந்தாலும் முந்தைய ஆண்டு 494 கோடி ரூபாய் நஷ்டத்திலிருந்து 2013-14ம் ஆண்டு நஷ்டம் 430 கோடியாக குறைந்துள்ளது எனவும் MNP-ல் பிற தனியார் நிறுவனங்களிடமிருந்து BSNLக்கு சுமார் 98000 வாடிக்கையாளர்கள் இணைந்துள்ளதையும் குறிப்பிட்டு பாராட்டினார். தமிழகத்தில் மூன்று மாவட்டங்கள் லாபமடைந்துள்ளன. அவை நாகர்கோவில், பாண்டிச்சேரி மற்றும் குன்னூர் ஆகியன.. இம் மூன்று மாவட்டங்களிலும் BSNLEU வலுவான சங்கமாக உள்ளது பாராட்டுக்குரியது.

- பிராட்பேண்ட் பழுதுகளை உடனடியாக நீக்குவது
- நெல்லை மாவட்ட்த்தைப் போல் மாலை நேர மார்கெட்டிங் பணி அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்வது
- BSNL நமது வாழ்வாதாரம் என்ற உணர்வோடு பணி செய்வது
- சேவை மனப்பான்மையுடன் செயல்படுவது

ஆகியவற்றை வலியுறுத்தி தமிழகத்தில் BSNL ஐ நிலை நிறுத்திட பாடுபடுமாறு கேட்டுக்கொண்டார்.

தலைமைப் பொது மேலாளர் திரு G.V.ரெட்டி அவர்கள் கேரளம் மற்றும் ஒரிஸா போன்ற மாநிலங்களைப்போல தமிழகமும் லாபமீட்டும் மாநிலமாக மாற அனைவரின் ஒத்துழைப்பையும் நல்குமாறு கேட்டுக்கொண்டதுடன் நெல்லை கோவை ஆகிய மாவட்டங்கள் சிறப்பாக சேவை செய்யும் மாவட்டங்களாக தேர்தெடுக்கப்பட்டுள்ளதற்கு பாராட்டுதலையும் தெரிவித்தார்.

திருச்சி முதன்மைப் பொதுமேலாளர் திரு V.ராஜி அவர்கள், முன்பு தான் பணியாற்றிய அந்தமானில் 5 ஆண்டுகளாக தொடர்ந்து வந்த நஷ்டம் கடந்த ஆண்டு லாபமாக மாற்றப்பட்டுள்ளதையும் தற்போது பின்தங்கியுள்ள திருச்சி மாவட்டத்தை ஊழியர்களுடன் இணைந்து முன்னணி மாவட்டமாக மாற்ற உறுதி ஏற்பதாகவும் தெரிவித்தார்.

நிறைவுரை ஆற்றிய பொதுச் செயலர் தோழர் P.அபிமன்யு அவர்கள் மொபைல் சேவையில் தனியார் நிறுவன்ங்கள் அனுமதிக்கப்பட்டு 7 ஆண்டுகளுக்கு பிறகு BSNL அனுமதிக்கப்பட்டாலும் இரண்டே ஆண்டுகளில் முன்னணி இடத்தை பிடித்தும், அனைத்து தனியார் கம்பெனிகளும் 6.5 லட்சம் மொபைல் இணைப்புகள் வழங்கியபோது BSNL மட்டுமே 2 ½ லட்சம் இணைப்புகள் வழங்கி முன்னேறியதையும், பின்னர் தனியார் முதலாளிகளின் நிர்ப்பந்தத்தால், குறிப்பாக திரு ஆ.ராசா அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு 45 மில்லியன் இணைப்புக்களுக்கான டெண்டரை ரத்து செய்தபோது ஒரு நாள் வேலை நிறுத்த்தின் மூலம் 23 மில்லியன் இணைப்புக்களுக்காக டெண்டர் விடப்பட்டது. தொடர்ந்து அரசாங்கத்தின் கொள்கைகளை BSNL நஷ்டத்திற்கு காரணம், கடந்த ஊதிய உயர்வின் போது 50000 ஊழியர்கள் தற்போது ஓய்வு பெற்றவர்கள் அன்று கூடுதலாக பணியில் இருந்தது, எனவே ஊதியமே நஷ்டத்திற்கு காரணம் என்பது தவறு.

ஒரு புறம் அரசின் கொள்கைகளை எதிர்த்து போராடுவது, மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வது, மறுபுறம் வாடிக்கையாளர்களிடம் இனிமையாக பேசுவது, சிறப்பான சேவையை அளிப்பது, பணிக்கலாச்சாரத்தை மேம்படுத்துவதன் மூலம் தான் BSNLஐ பாதுகாக்க முடியும் என்பதை விரிவாகவும், ஆணித்தரமாகவும் எடுத்துரைத்தார்.

மாநில துணைச் செயலர் தோழர் M.முருகையா நன்றி கூற துவக்க விழா நிகழ்ச்சிகள் நிறைவுற்றன.

**வாழ்த்துரை:-** 12.10.2014 அன்று மாலை 4.30 மணியளவில் இரண்டாம் நாள் தோழமை சங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினார்கள். வந்திருந்த தலைவர்களை தமிழ் மாநில அமைப்பு செயலாளர் தோழர் C.செல்வின் சத்யராஜ் வரவேற்றார். CITU சங்கத்தின் மாநில பொது செயலாளர் தோழர் **G.சுகுமாறன்** தனது வாழ்த்துரையில், சமீபத்தில் நடைபெற்ற ஒப்பந்த ஊழியர்களுக்கான உண்ணாவிரதம் மற்றும் வேலை நிறுத்தம் ஆகிய போராட்டங்களை பாராட்டி அரசின் கொள்கைகளுக்கு எதிராக நடைபெற உள்ள போராட்டங்களில் BSNL ஊழியர் சங்கம் முன்னின்று செயல்பட வேண்டும் என வாழ்த்தினார். NFTE BSNL சங்கத்தின் மாநில செயலாளர் அவர்களின் அகில இந்திய மாநாட்டில் கலந்துக் கொள்ள சென்று விட்டதால் அவர்களின் மாநில துணைத்தலைவர் தோழர் லோகநாதன் நமது மாநாட்டை வாழ்த்தி ஊழியர்களின் பிரச்சனையில் நாம் ஒன்று பட்டு போராடுவோம் என வாழ்த்தினார். TEPU சங்கத்தின் மாநில செயலாளர் தோழர்

A.செல்லபாண்டி, தோழர் M.கோபிநாதன் CS SNEA(I), தோழர் S.சிவகுமார் CS AIBSNLEA, தோழர் P.அழகுபாண்டியராஜா CS SNATTA, தோழர் C.K.நரசிம்மன் CS AIBDPA ஆகியோர் தமிழகத்தில் நமது கூட்டு போராட்டங்களை நினைவு கூர்ந்து அதில் BSNL ஊழியர் சங்கத்தின் செயல்பாட்டை பாராட்டி உரை நிகழ்த்தினார்கள். இவர்கள் அனைவரும் பேசியவுடன் உரை நிகழ்த்திய நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் மத்திய அரசின் கொள்கைகள் மற்றும், மேல்மட்ட நிர்வாகத்தின் செயல் திறன் இல்லாமை ஆகியவற்றை விவரித்து அவர்களிடம் இருந்து BSNLஐ காப்பாற்ற அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் ஒன்று பட்ட போராட்டத்தால் மட்டுமே முடியும் என்று தெளிவு படுத்தி உரை நிகழ்த்தினார். இறுதியில் தமிழ் மாநில அமைப்பு செயலாளர் தோழர் S.தமிழ் மணி நன்றி தெரிவித்து உரை நிகழ்த்தினார். 13.10.2014 அன்று BSNL WWCCன் தமிழ் மாநில அமைப்பாளர் தோழர் P.இந்திரா மற்றும் TNTCWU சங்கத்தின் தமிழ் மாநில செயலாளர் தோழர் C.வினோத்குமார் ஆகியோர் நமது 7ஆவது தமிழ் மாநில மாநாட்டை வாழ்த்தினார்கள்.

**பொருளாய்வுக்குழு:-** முதல் நாள் மாலை 5.00 மணி முதல் மூன்றாம் நாள் வரை நடைபெற்ற பொருளாய்வுக்குழு சார்பாளர்களை மட்டும் உள்ளடக்கி நடைபெற்றது. தீர்மானக்குழு(தோழர் M.முருகையா, தோழர் M.நாராயணசாமி, தோழர் C.பழனிச்சாமி, தோழர் V.வெங்கட்ராமன், தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன்), பதிவுக் குழு (தோழர் L.பரமேஸ்வரன், தோழர் C.ராஜேந்திரன், தோழர் C.செல்வின் சத்யராஜ்) மற்றும் தகுதி ஆய்வுக் குழு (தோழர் S.சுப்ரமணியன், தோழர் S.தமிழ்மணி, தோழர் R.மகேந்திரன் தோழர் S.ரவீந்திரன்) ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் BSNL ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் S.செல்லப்பா செயல்பாட்டு அறிக்கையினை முன்வைத்து உரையாற்றினார். மாநில செயற்குழு செழுமைப் படுத்திய அவரது 105 பக்க அறிக்கையினை அறிமுகப்படுத்தி சிறப்பானதொரு உரையினை நிகழ்த்தினார். இரண்டாம் நாள் முதல் மூன்றாம் நாள் காலை வரை ஆறு பெண் தோழியர்கள் உட்பட 43 தோழர்கள் விவாதத்தில் பங்கேற்றனர். BSNLஐ பாதுகாக்கவும், சேவைத்தரத்தை உயர்த்தவும், ஒப்பந்த ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கான போராட்டங்களுக்கு நாம் வழிகாட்ட வேண்டும் என வலியுறுத்தியும், மதசார்பின்மை வலியுறுத்தியும், தீண்டாமை கொடுமையை தடுத்து நிறுத்தும் போராட்டங்களைல் பங்கேற்பது தொடர்பாகவும், பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை கண்டித்தும், ஊழியர்களின் பிரதான் கோரிக்கைகள் தொடர்பாகவும், நமது சங்க வளர்ச்சி மற்றும் போராட்டங்கள் ஆகியவற்றை முன்னிறுத்தியும் பேசிய தோழர்கள் அனைவரும் வலியுறுத்தி பேசினார்கள். கேடர் வாரியான தோழர்களின் சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கு நமது பொது செயலாளர் அற்புதமாக விவரித்து, அனைத்து பகுதி ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை வடித்தெடுத்து 30 அம்சங்களாக முன் வைத்து நடைபெற்ற போராட்டங்களில் பங்கேற்றவர்களை வாழ்த்தியதுடன், 27.11.2014 ஒரு நாள் வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இறுதியில் நமது தமிழ் மாநில செயலாளர் தோழர் S.செல்லப்பா தனது தொகுப்புரையில் நமது 7ஆவது தமிழ் மாநில மாநாட்டில் புகைப்படங்களை அற்புதமாக எடுத்து வடிவமைத்து, நமது மாநில சங்க இணையதளத்தில் அற்புதமாக பதிவேற்றம் செய்திட்ட விருது நகர் மாவட்டத்தில் பணியாற்றி வரும் தோழர் A.மதிக்கண்ணன் மற்றும் தோழர் A.S.அஷ்ரப்தீன் ஆகிய தோழர்களை மனமார பாராட்டியபோது மாநில மாநாடே அவர்களின் சேவையினை பலத்த கரவொலிக்கிடையே பாராட்டியது. தனது சக்திக்கும் மிஞ்சும் வகையில் நமது திருச்சி மாவட்ட தோழர்கள் இந்த மாநில மாநாட்டை திறம்பட நடத்தியதையும் அவர் பாராட்டினார். இந்த

மாநாட்டு விவாதத்தில் பங்கேற்ற 6 பெண் சார்பாளர்களும் தங்களின் கருத்துக்களை அழுத்தம் திருத்தமாக முன்வைத்து பேசியதையும் அவர் வெகுவாக பாராட்டினார். சார்பாளர்கள் விவாதத்தில் எழுப்பிய பல சந்தேகங்களுக்கு விடை அளித்த அவர் கீழ்கண்ட முடிவுகளையும் அறிவித்தார்.

- மத ஒற்றுமையை வலியுறுத்தி மாநிலந்தழுவிய கருத்தரங்க ஒன்றினை ஓரிரு மாதங்களில் மதுரையில் நடத்துவது.
- BSNL வளர்ச்சிக்கான மாவட்ட அளவிலான கருத்தரங்களை உடனடியாக நடத்துவது.
- தொழிற்சங்க வளர்ச்சிக்கு மண்டல வாரியான கருத்தரங்கங்களை உடனடியாக நடத்துவது.
- தமிழகத்தில் BSNL சேவைகளை மேம்படுத்திட மாவட்ட சங்கங்களோடு கலந்தாலோசித்து அதன் அடிப்படையில் முடிவினை எடுத்து டிசம்பர் முதல் வாரத்தில் நிர்வாகத்திற்கும், மத்திய சங்கத்திற்கும் கொடுப்பது.
- தொடர்ச்சியாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வரும் நெய்வேலி ஒப்பந்த தொழிலாளர்களுக்கு ஆதரவாகவும், நோக்கியா நிறுவனம் மூடப்படுவதை கண்டித்தும் தமிழ் மாநிலத்தில் 16.10.2014 அன்று அனைத்து கிளைகளிலும் ஆர்ப்பாட்டம் நடத்துவது.

மாநில செயலர் தோழர் S.செல்லப்பாவின் தொகுப்புரைக்கு பின் மாநில மாநாடு செயல்பாட்டு அறிக்கையினையும், மாநில பொருளாளர் தோழர் K.சீனிவாசன் முன் வைத்த வரவு செலவு அறிக்கையினையும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

தகுதி ஆய்வுக்குழுவின் அறிக்கையினை உதவி மாநில செயலாளர் தோழர் S.சுப்ரமணியன் முன்வைக்க, BSNLஐ பாதுகாப்பது, 27.11.2014 வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்குவது உள்ளிட்ட தீர்மானங்களை (முழு விவரம் தனியாக தரப்படும்) மாநில துணைத்தலைவர் தோழர் V.வெங்கட்ராமன் முன்வைக்க இவைகளை மாநில மாநாடு ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. நமது மாநில மாநாட்டில் சார்பாளர்களாக கலந்துக் கொண்டவர்களில் மூத்த தோழரான தோழர் M.நாராயணசாமி நமது சங்கக் கொடியினை இளைய தோழியரான தோழர் R.ராஜேஸ்வரியிடம் வழங்கிய போது பல மூத்த தோழர்கள் ஓய்வு பெற்று வரும் இன்றைய சூழலில் இந்த இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல இளைஞர்கள் பலர் தயாராக உள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுவதாக இருந்தது.

பின்னர் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்வினை நமது அகில இந்திய பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் நடத்தி வைத்தார். புதிய மாநில சங்க நிர்வாகிகள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஏகமனதாக நடைபெற்ற நிர்வாகிகள் தேர்தலுக்கு பின் மாநில துணைத்தலைவர் தோழர் வெங்கட்ராமன் நன்றி கூறி மாநாட்டை நிறைவு செய்தார்.

ஒரு சிறிய இடைவெளியில், தங்களுக்கு உள்ள நெருக்கடிகளுக்கு இடையிலும் இந்த மாநாட்டை சிறப்பாக நடத்திய திருச்சி மாவட்ட சங்கத்தை தமிழ் மாநில மாநாடு மனமார பாராட்டியது.

## தமிழ் மாநில சங்கத்தின் புதிய நிர்வாகிகள்

| | | |
|---|---|---|
| **தலைவர்** | : | **தோழர்S.செல்லப்பா, SSS, சென்னை** |
| துணைத்தலைவர்கள்: | 1. | தோழர் K.மாரிமுத்து,TM, கோவை |
| | 2. | தோழர் .V.வெங்கட்ராமன்,, STS,, கோவை |
| | 3. | தோழர் T.பிரேமா, TM, சென்னை |
| | 4. | தோழர்ஜான்போர்ஜியா, TM, திண்டுக்கல் |
| | 5. | தோழர் C.சுவாமிகுருநாதன், STS, அம்பாசமுத்திரம். |
| **செயலர்** | : | **தோழர்** A.**பாபுராதாகிருஷ்ணன்**, SSO, **குன்னூர்** |
| துணைச்செயலர்கள்: | 1. | தோழர் M.முருகையா, TTA, சென்னை |
| | 2. | தோழர்S.சுப்ரமணியன் ,STS, திருப்பூர் |
| | 3. | தோழர் P.இந்திரா, SSS, நாகர்கோவில் |
| | 4. | தோழர் S.தமிழ்மணி, STS, திருச்செங்கோடு |
| | 5. | தோழர் .C. செல்வின்சத்தியராஜ், TTA, மதுரை |
| **பொருளாளர்** | : | **தோழர்** K.**சீனிவாசன்**, TM, **சென்னை** |
| துணைப்பொருளாளர்: | | தோழர் R.மகேந்திரன், TTA, சென்னை |
| அமைப்புச்செயலர்கள்: | 1. | தோழர் A.முகமதுஜாபர், TM, திருப்பூர் |
| | 2. | தோழர் V.மணியன், TM, ஈரோடு |
| | 3. | தோழர் R.மெய்யப்பன் கிரிஸ்டோபர் ,STSO, திருச்செந்தூர் |
| | 4. | தோழர் M.பாபு, TM, கிருஷ்ணகிரி |
| | 5. | தோழர் A.அண்ணாமலை, SSS,கடலூர் |
| | 6. | தோழர் M.மல்லிகா, STS, புதுக்கோட்டை |
| | 7. | தோழர் P.சந்திரசேகர், TM, போடி |

BSNLஐ பாதுக்காக்கவும் BSNL ஊழியர்களின் நலனை காக்கவும் உருவாகி உள்ள ஒரே ஒப்பற்ற சங்கமாம் BSNL ஊழியர் சங்கத்தை மென்மேலும் வளர்த்தெடுக்கும் உறுதியினை சார்பாளர்கள் நெஞ்சில் ஏந்தி கொண்டு உற்சாகமாய் புறப்பட்டனர்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**

**மாநில செயலாளர்.**